# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1380/3 - 2005 පෙබරවාරි 14 වැනි සඳුදා - 2005.02.14

*1380/3 ஆம் இலக்கம் - 2005 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதாரச் சேவைக் குறிப்பு**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினால் 1980, ஐப்பசி 31 ஆம் திகதிய 113 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட 1978, ஐப்பசி முதலாம் திகதிய இலங்கை கால்நடை உற்பத்தி சுகதாரச் சேவைக் குறிப்பினதும் அதன் திருத்தங்களினதும் பிரிவு 3 இன் குறிப்பு (i) உம் பிரிவுகள் 8, 9, 10 ம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆணையின் பிரகாரம் இத்தால் திருத்தப்பட்டு மாற்றீடு செய்யப்பட்டுள்ளது.

திஸ்ஸ வர்ணசூரிய,
செயலாளர்,
விவசாய, கால்நடை, காணி, நீர்ப்பாசன அமைச்சு.

"கொவிஜன மந்திரய",
80/5, ரஜமல்வத்தை ஒழுங்கை,
பத்தரமுல்ல,
2005.02.11

**இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதாரச் சேவைக் குறிப்பு**

(3) குறிப்பு (i)

வகுப்பு II தரம் II இற்கு நியமிக்கப்படுவோர் ஆட்சேர்ப்புச் செய்யும் போது, குறிக்கப்பட்ட அடிப்படை தகைமைகளுக்கு மேலதிகமாக கலை முதுமானி/விஞ்ஞான முதுமானி பட்டத்தைக் கொண்டவராக அல்லது அவற்றுக்கும் மேலான முதுமானிப் பட்டத்தை உடையவராக இருப்பின், அவர்கள் 1,23,300 ரூபாவிற்கு மேற்படாத வருடாந்த சம்பளத்தைக் கொண்ட 4 ஆவது நிலைச் சம்பளத் திட்டத்தில் நியமிக்கப்படுவர்.

(8) வகுப்பு II தரம் II இல் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பொதுவான தகைமைகள் :

(ஆ) சகல விண்ணப்பதாரிகளும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதி அன்று 20 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(இ) முதுமானிப் பட்டம் பெற்ற விண்ணப்பதாரிகள் தொடர்பான உயர் வயதெல்லை 40 ஆகும்.

(ஈ) சிறந்த குணவியல்பும் தேகாரோக்கியமும் உள்ளவராக இருத்தல் வேண்டும். உடற் தகுதி, வைத்திய பரிசீலனை சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(உ) கால்நடை வைத்திய பட்டதாரிகள் இலங்கை கால்நடை வைத்திய சபையின் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஊ) மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பின் கீழ் விண்ணப்பிப்போருக்கு மேற்குறிப்பிட்ட உயர் வயதெல்லை கணிக்கப்பட மாட்டாது.

(9) வகுப்பு II தரம் II இற்கு திறந்த முறை ஆட்சேர்ப்பு :

(i) ஆட்சேர்ப்புச் செய்யும் முறை :

(ஆ) கால்நடை வைத்திய ஆராய்ச்சி அலுவலர், கால்நடை வைத்தியர், ஆராய்ச்சி அலுவலர் ஆகியவற்றுக்கான நியமனங்கள் திறந்த ஆட்சேர்ப்பு முறை மூலம் செய்யப்படும். கால்நடை அலுவலருக்கான நியமனங்களில் 50 வீத வெற்றிடங்கள் திறந்த ஆட்சேர்ப்பு முறைமூலம் நிரப்பப்படும். மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு முறை மூலம் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதிக்கப்பட்ட விகிதாசார எண்ணிக்கைக்கு போதுமான தகுதியுள்ள விண்ணப்பதாரிகள் கால்நடை அலுவலர் பதவிகளுக்கு இல்லாதிருப்பின், மீதமுள்ள வெற்றிடங்கள் திறந்த ஆட்சேர்ப்பு முறை மூலம் நிரப்பப்படும்.

(ஆ) தேவையான தகுதிகளைக் கொண்ட ஒரு விண்ணப்பதாரி கால்நடை ஆராய்ச்சி அலுவலர், கால்நடை வைத்தியர், ஆராயச்சி அலுவலர், கால்நடை அலுவலர் ஆகிய எந்தப்பதவிக்கும் வெவ்வேறாக விண்ணப்பிக்க முடியும்.

(இ) விண்ணப்பதாரிகள் பதவிக்காக குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு வினாத்தாளிலும் 50% அல்லது அதற்கும் கூடிய புள்ளிகளைப் பெற வேண்டும். இவ்வாறு தகுதி பெற்றவர்கள் பொதுப் பரீட்சையிலும் குறிப்பிட்ட பாடப் பரீட்சையிலும் பெற்றுக்கொண்ட சராசரிப் புள்ளிகளுக்கு அமைய ஒரு நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற அழைக்கப்பட்டு கூடிய சராசரிப் புள்ளிகளின் வரிசை அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

(ii) கல்வித் தகமைகள் :-

வகுப்பு II தரம் II இல் (அ) முதல் (ஈ) வரை அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளுக்கான விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் :

(அ) கால்நடை அலுவலர்
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட கால்நடை வைத்திய விஞ்ஞானம்/கால்நடை வளர்ப்பு விஞ்ஞானம்/விவசாய விஞ்ஞானம் சம்பந்தமான 4 வருட பட்டப்படிப்பு ;

(ஆ) கல்நடை வைத்தியர்
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட கால்நடை வைத்திய விஞ்ஞானத்துறையில் 4 வருட பட்டப்படிப்பு ;

(இ) ஆராய்ச்சி அலுவலர்
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட கால்நடை வளர்ப்பு விஞ்ஞானம் /விவசாய விஞ்ஞானம் சம்பந்தமான 4 வருடங்களை உள்ளடக்கிய 1 ஆம் அல்லது 2 ஆம் வகுப்பில் பெற்ற உயர் பட்டம் ;

(ஈ) கால்நடை வைத்திய ஆராய்ச்சி அலுவலர்
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட நான்கு வருடங்களை உள்ளடக்கிய கால்நடை வைத்திய விஞ்ஞானத் துறையில் 1 ஆம் அல்லது 2 ஆம் வகுப்பில் பெற்ற உயர் பட்டம் ;

**குறிப்பு**- (i) விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படும் பரீட்சைக்கு விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதிக்கோ அல்லது அதற்கு முன்னரோ அடிப்படை கல்வித் தகைமைகள் பற்றிய பட்டப்படிப்பு சம்பந்தமான முழுமையான தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும். அதன் பொருட்டு பட்டத்திற்கு உரித்துடையவராகிய திகதி, விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதிக்கோ அல்லது அதற்கு முன்னராகவோ இருத்தல் வேண்டும்.

(ii) பட்டப்படிப்பிற்கான முடிவுகள் அறிவிக்கப்படாத விண்ணப்பங்கள் தகுதியானவையாகக் கருதப்பட மாட்டாது.

(10) வகுப்பு II தரம் II இற்கான மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு :

(i) மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு முறை : கால்நடை உத்தியோகத்தர்களுக்கான பதவியில் உள்ள வெற்றிடங்களில் 50 வீதம் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேரிப்பின் மூலம் நிரப்பப்படும்–

(அ) இரண்டாவது அட்டவணையில் குறிக்கப்பட்டவாறு விண்ணப்பதாரிகள் ஒரு பொது பரீட்சைக்கும் குறிப்பிடப்பட்ட பாடப் பரீட்சைக்கும் தோற்ற வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு வினாத்தாளிலும் 50% அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(இ) போட்டிப்பரீட்சையில் குறிப்பிடப்பட்ட வினாத்தாள்களில் பெற்ற மொத்த புள்ளிகளின் வரிசை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்

(ii) மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு முறைக்கான தகைமைகள் :–

கால்நடை வளர்ப்பு/விவசாய டிப்ளோமா அல்லது 2 வருட ஆய்வுகூட முறைகளுக்கான சான்றிதழ் கற்கைநெறி சான்றிதழ்களை உடைய கால்நடை உற்பத்தி சுகாதாரக் திணைக்களத்தில் பணியாற்றும் ஒரு கால்நடை அபிவிருத்தி அலுவலர் / கால்நடை அபிவிருத்தி உபதேசகர் / ஆராய்ச்சி உதவியாளர் ஆகியோருள் 10 வருட மொத்த சேவைக்காலத்தையும் இலங்கை தொழில்நுட்ப சேவையின் விசேட தரத்தில் அல்லது வகுப்பு ஒன்றில் நான்கு வருட திருப்திகரமான சேவையாற்றியவர்.

அல்லது

அங்கீகரிகப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட கால்நடை வளர்ப்பு விஞ்ஞானத்தில் அல்லது விவசாய விஞ்ஞானத்தில் 4 வருட பட்டப்படிப்புடன் 5 வருட சேவைக்காலம் உள்ள கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் பணியாற்றும் முன்னர் குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்த தாழ்நிலையிலுள்ள அலுவலர்.

குறிப்பு (i)

மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களங்களில் பணிபுரியும் முன்னர் குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்த தாழ்நிலையிலுள்ள அலுவலர்களும் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புக்கு விண்ணப்பிக்கலாம்.

3-04

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.